கல்வியமைச்சு – E Thaksalawa மாதிரி வினாப்பத்திரம் - 01

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)

General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)

தமிழ் மொழியும் இலக்கியமும் I, II ஒரு மணித்தியாலம்

Tamil Language and Literature I, II One hours

தமிழ் மொழியும் இலக்கியமும் I

# விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 - 3 | 11 - 2 | 21 - 4 | 31 - 4 |
| 2 - 1 | 12 - 3 | 22 - 2 | 32 - 2 |
| 3 - 3 | 13 - 2 | 23 - 1 | 33 - 1 |
| 4 - 1 | 14 -1 | 24 - 2 | 34 - 2 |
| 5 - 1 | 15 - 1 | 25 - 4 | 35 - 4 |
| 6 - 2 | 16 - 4 | 26 - 1 | 36 - 1 |
| 7 - 1 | 17 - 2 | 27 - 2 | 37 - 4 |
| 8 - 1 | 18 - 3 | 28 - 3 | 38 - 2 |
| 9 - 4 | 19 - 4 | 29 - 1 | 39 - 3 |
| 10 - 4 | 20 - 2 | 30 - 2 | 40 - 3 |

**கல்வியமைச்சு – E Thaksalawa** **மாதிரி வினாப்பத்திரம் - 01**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**

**Tamil Language and Literature I, II**

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**கவனிக்க :**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

ii. இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

## விடைகள்

1. சுருக்கமான விடை எழுதுக.

i. பெண்கள் + தொழிலாம் + என்றே + பேசிடுவர் + ஒரு + சாரார்

ii. கலம் - படகு அல்லது பாத்திரம்
களம் - இடம்
பொருத்தமான வாக்கிய அமைப்பிற்கு புள்ளி வழங்குக.

iii. பொருத்தமான வாக்கியத்திற்கு புள்ளி வழங்குக.

iv. ஆல் உருபு - காரணப் பொருள்

v. காகம், சினம், பந்து, மதம், வனம்

vi. குயவனால் பானை வனையப்பட்டது. / பானை குயவனால் வனையப்பட்டது.

vii. 1. தரவு திரட்டுதலும் குறிப்பெடுத்தலும்
2. குறிப்புகளை மீள பரிசீலித்தல்.
3. திரட்டிய தரவுகளை சட்டகமாக ஒழுங்குபடுத்தல்.

viii. வினாக்களை தொடுக்கும் ஆற்றல், விடயம் பற்றிய முன்னறிவு

ix. நீரேரி - நீர் + ஏரி , கடற்கரை - கடல் + கரை இது போன்ற பொருத்தமான விடைகளுக்கு புள்ளி வழங்குக.

x. எண் வழு
திருத்தம் : இரண்டு குழுக்கள் விவாதத்தில் பங்குபற்றி, அதில் ஒரு குழு வெற்றியீட்டியது.

(20 புள்ளிகள்)

[பக்.2 ஐப் பார்க்க

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடையெழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலைப்பு இடுக.

**i. பொருத்தமான தலைப்புகள்:**

- சமயக் கல்வியின் முக்கியத்துவம்
- மனித பண்பைப் போதிக்கும் சமயம்
- மேன்மை தரும் சமயக்கல்வி

**அறிமுகம்:**

- மனிதப் பண்புகளைப் போதிக்கும் சமயம் பற்றிய அறிமுகம்

**சமயக்கல்வியை இளமையில் கற்பிக்க வேண்டியதன் அவசியம்**

- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.
- ஒழுக்க சீலராய் வாழுதல்.
- பாடசாலையில் கற்கும் பருவம் இளமைப்பருவம்.

**சமயக் கல்வியை கற்பதற்கு மேற்கொள்ள வேண்டியவை.**

- பாடசாலையில் சமயக்கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- சமய நிகழ்வுகள் போட்டிகளை நடாத்துதல்.
- அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்புதல்.
- ஆலய வழிபாட்டை மேற்கொள்ளல்.
- வீட்டில் குடும்பத்துடன் இணைந்து இறை வழிபாடாற்றல்.

**ii. பொருத்தமான சில தலைப்புக்கள்**

- இளந்தலைமுறையினரும் வலைத்தளமும்
- வலைத்தளங்களில் நல்லதைப் பெறுவோம்.
- தீயனவிட்டு நல்லன அறிவோம்.

**வலைத்தளங்களினால் பெறும் நன்மைகள்**

- கல்வி சார்ந்த விடயங்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளல்
- வீண் பொழுது போக்கல்
- ஆபாசமான வலைத்தளங்களைப் பயன்படுத்தல்
- பல்வேறு வகையான விளையாட்டுக்களை விளையாடுவதால் உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான உடற்பயிற்சி, விளையாட்டில் ஆர்வம் குறைதல்.
- தீய நடத்தையுடையவர்களின் நட்புறவு.

**மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்**

- இளந்தலைமுறையினருக்கு போதிய விழிப்புணர்வூட்டல்.
- தேவையற்ற வலைத்தளங்களைப் பார்க்க முடியாத வகையில் தடைசெய்தல்.
- பெற்றோருக்கு போதிய விளக்கமளித்தல்.
- கலாசாரம், பண்பாடு போன்றவற்றுடள் தொடர்புடைய வலைத்தளங்களை சமூகத்தில் பகிர்ந்து கொள்ளல்.

**iii. பொருத்தமான தலைப்புக்கள்**

- தாய்மொழியில் கற்போம்.
- தாய்மொழியைப் பேணுவோம்.
- தாய்மொழியின் சிறப்புக்கள்.

**அறிமுகம்**

- தாய்மொழிக் கல்வி பற்றிய அறிமுகம்
- ‘‘தனது தாய்மொழியைத் தெரியாது வாழ்பவன் தந்தையின் பெயர் தெரியாது வாழுபவனைப் போன்றதாகும்’’ - பிரெஞ்சுப் பழமொழி

**தாய்மொழியினைக் கற்காமைக்கான காரணங்கள்**

- தாய்மொழியின் சிறப்பினை அறியாமை.
- வேற்று மொழியின் மோகம். (ஆங்கில மொழி பேசுவதை அதிகம் விரும்புகின்றமை)
- நவீன மயமாக்கம்

**தாய்மொழியை கற்பதற்கு மேற்கொள்ள வேண்டியவை.**

- தாய்மொழி மீதான பற்றினை சிறுவயதிலேயே வளர்த்தல்.
- பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- தாய்மொழி சார்ந்த நிகழ்வுகளுக்கு அழைத்துச் செல்லல்.
- பெற்றோர்களுக்கு போதிய விழிப்புணர்வூட்டல்.

**iv. பொருத்தமான தலைப்புக்கள்**

- அனுபவமே ஆசான்
- வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் நாணயத்தின் இரு பக்கம்
- நினைப்பதெல்லாம் நடப்பதில்லை

சிறுகதை எழுதும் போது கவனிக்க வேண்டிய விடயங்களைக் கருத்திற் கொண்டு பூபாலன் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்து, செல்வச் செழிப்பில் தனது வாழ்க்கையை வாழ்ந்து எதிர்பாராத விபத்தின் விளைவாக அனைத்தையும் இழந்து, அவனது வாழ்க்கை கேள்விக்குள்ளாகி என உங்கள் கற்பனையில் எழுதலாம்.

(25 புள்ளிகள்)

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

**சுருக்கம்:**

- உலகம் விஞ்ஞானத்தின் பாதையில் முன்னேறி, இருபத்தோராம் நூற்றாண்டில் தொழிநுட்ப வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- இத்தொழில் நுட்பத்தின் அசுர வேக வளர்ச்சியானது தகவல் தொடர்பாடல் துறையிலே பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றது எனலாம்.
- மனிதன் காலப்போக்கில் தம் சனப்பெருக்கத்திற்கேற்பவும் தமது தேவைகளைக் கருத்திற்கொண்டும் தொழில்நுட்பத்திறன் கொண்ட தொடர்பாடல் ஊடகங்களை உருவாக்குவதற்கு முற்பட்டான்.
- தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி, கணனி, தந்தி, தொலைநகல், போன்றவைகளின் வளர்ச்சியும், விஞ்ஞான தொழில்நுட்பமும், ஒன்றினைந்து கைக்கோர்த்து உருவாக்கியதே ‘‘இணையம்’’ ஆகும்.
- இணையமானது இன்றைய காலக் கட்டத்தைப் பொறுத்தவரை தொடர்பாடல் துறையில் இன்றியமையாததொன்றாக காணப்படுவது மட்டுமன்றி பல துறைகளில் புதுமைப்படைத்து வரும் இணையப் பயன்பாடுகள் எண்ணிலடங்காதவை.
- இவ்வரிய இணையத்தளத்தை நாம் பயன்படுத்த எமக்கு தொலைபேசி இணைப்புகள் (மோடம்) அவசியமாக காணப்படுகின்றது.
- மனிதன் இன்று பல மைல் தூரம் இருப்பினும் முகம் பார்த்து பேசுவதற்கு ஒரே காரணம் இணைய மேம்பாடாகும்.
- இன்று இணையத்தில் உள்ள முக்கிய தொடர்பாடல் தொழில் நுட்ப வலையத்தளங்களான முகப்புத்தகம், மின்னஞ்சல், கீச்சகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- இவற்றின் மூலம் தகவல்களையும், செய்திகளையும் ஒருவருக்கொருவர் பரிமாரிக்கொள்ளலாம். அத்துடன் உலகளாவிய ரீதியில் நடைபெறும் பல நல்ல தகவல்களையும், உண்மைத் தகவல்களையும் தெரிந்துக்கொள்ள பயன்படுகின்றது.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் செய்யுளை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i. இப்பாடல் யாரை சுட்டிப் பாடப்படுகின்றது?
**தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைக் சுட்டிப் பாடப்பட்டிருக்கின்றது.**

ii. சுட்டப்பட்ட நபர் உருக்குலைந்து போன காரணம் யாது?
**சூரியனின் அல்லது கடுமையான வெப்பம் காரணமாக உருக்குலைந்து காணப்படுகின்றனர் என குறிப்பிடப்படுகின்றது.**

iii. இப்பாடலில் காணப்படுகின்ற ஒரு அணியை இனங்கண்டு விளக்குக.
**கண் காக்கும் இமை போல**
**உவமானம்: கண் காக்கும் இமை**
**உவமேயம்: தேயிலையைக் கருவாகக் காத்தல்.**
**பொதுத்தன்மை : பாதுகாப்பு**
**உருபு: போல**

iv. ‘‘வாயிற்பூட்டிய விலங்கு, கையிற் றாங்கிய ஓடு’’ என்பதன் மூலம் வெளிப்படும் விடயம் யாது?
**தன் கருத்தினை வெளியிடும் உரிமை அற்றுப்போதல்.**
**உணவுக்காக பாத்திரம் ஏந்துதல். (பிச்சை எடுத்தல்)**

v. உடம்பு எதற்கு உரமாக்கப்படுகின்றதென கவிஞர் கூறுகின்றார்?
**தேயிலைச் செடிக்கு உரமாதல்.**

(10 புள்ளிகள்)

5. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து 100 சொற்களுக்கு குறையாது எழுதுக.

**i.** **விடை: கடிதத்திற்குரிய அம்சங்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும்.**
**தொழின்முறைக் கடிதத்திற்குரிய அமைப்பு கையாளப்படுதல் வேண்டும்.**

**கடிதத்தில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள்**

- அரச போக்குவரத்து சேவை இல்லை. அதேவளை தனியார் சேவை மட்டும் இயங்குதல் தொடர்பான கருத்து. அதுவும் தனியார் சேவை குறைவாகவே இயங்குகின்றன என்பது வலியுறுத்தல்.
- இதனால் மக்கள் அசௌகரியத்திற்கு உள்ளாகல்.
- பாடசாலை மாணவர்கள் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகல்.
- உத்தியோகத்தர்கள் ஆசிரியர்கள் நேரத்திற்கு செல்ல முடியாமை.
- ஆகவே வேறு பேருந்து சேவைகளை மக்களுக்கு வழங்கமாறு கோரி கடிதத்தை முன்வைத்தல்.

அல்லது

**ii.** **விடை: அறிக்கைக்குரிய அம்சங்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும்.**

**அறிக்கையில் உள்ளடங்க வேண்டியவை.**

- பாதிக்கப்பட்ட இடங்கள்.
- மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள இடங்கள்.
- இனங்காணப்பட்ட தேவைகள்.
- தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களின் தொகை.
- கர்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கை.
- வயோதிபர்களின் எண்ணிக்கை.

(15 புள்ளிகள்)

**கல்வியமைச்சு – E Thaksalawa** மாதிரி வினாப்பத்திரம் - 01

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் III** **இரண்டு மணித்தியாலம்**

**Tamil Language and Literature III** **Two hours**

**தமிழ் மொழியும் இலக்கியமும் III**

**கவனிக்க :**

- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

# <u>விடைகள்</u>

1.

(i) (அ) வெற்றி வேற்கை / நறுந்தொகை

(ஆ) தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை

(ii) (அ) சோழமன்னன்

(ஆ) விண்ணுலகத்தலைநகரம் / விண்ணுலகம் / சுவர்க்கலோகம்

(iii) (அ) இருதுபர்ணன்

(ஆ) ஒரே பார்வையில் பல எண்ணிக்கையை எண்ணிக் கணக்கிடக்கூடிய வல்லமை கொண்ட கலை

(iv) (அ) திரிகூடராசப்ப கவிராயர்

(ஆ) உடலை அழிவிலிருந்து பாதுகாக்கும் மூலிகை / மருந்து

(v) (அ) உவமையணி

(ஆ) படுக்கை

(vi) (அ) புறநானூறு

(ஆ) இளைஞர்களின் செயற்பாடு

(vii) (அ) தருமபுத்திரர்

(ஆ) அறத்தை இலட்சியமாகக் கொண்டவர்.

(viii) (அ) எழுத்தறிவின்மையின் அவலம்

(ஆ) உணர்ச்சியற்ற சிரிப்பு

(ix) (அ) பெண்ணடிமைத்தனம்

(ஆ) திண்டாடுதல் / தடுமாறுதல்

(x) (அ) ரெறன்ஸ்(Terence) என்ற இலத்தீன் புலவர்

(ஆ) மக்கள் நலக்கொள்கை

**(2 x 10 = 20 புள்ளிகள்)**

2.

(i) (அ) தம்தலைவிதியைக் குறை கூறுவர், நண்பர்களை ஏசுவர், கோபம் கொண்டு பகைவரை நிந்திப்பர், சதிகள் செய்வர், பொய்ச்சாத்திரம் பேசுவர், சாதகங்களைப் புரட்டிப்பார்ப்பர்

(ஆ) உவமையணி – தாம் விரும்பியவற்றை அடையமுடியாத அறிவற்றவர்களுக்கு கண் இல்லாதவர் உவமையாகக் காட்டப்பட்டுள்ளனர்.

உவமானம் - கண்ணில்லாதவர்

உவமேயம் - தாம் விரும்பியவற்றை அடையாத அறிவற்றவர்

பொதுத்தன்மை - உண்மை தெரியாமை

(ii) (அ) முட்டாள்கள், அறிவில்லாதவர்கள், முதியவர்கள், எளியவர்கள்

(ஆ) காதலி கிடைக்காவிட்டால் துறவு (சந்நியாசம்) வாழ்க்கையை மேற்கொள்வேன் எனக் கூறுவதன் மூலம் தலைவனின் உண்மைக் காதல் வெளிப்படுகின்றது.

(iii) (அ) நித்தியம், நைமித்தியம், காமியம்

(ஆ) நாததத்துவத்தின் மெய்ப்பொருளாக அரி, அயன், அரன் என மூன்றுருவாக விளங்குகின்ற குற்றாலநாதர் எனச் சிறப்பிக்கப்படுகின்றார்.

(iv) (அ) கணிப்பொறி என்பது ஒரு இராட்சச வேலைக்காரன். சொல்லும் வேலைகளை எல்லாம் கச்சிதமாகச் செய்யும், ஆனால் தவறான கட்டளைகளைப் பிறப்பித்து விட்டாலோ தானே எஜமானன் ஆகிவிடும். பிறகு நீங்கள் அதற்கு அடிமைதான். இன்னொன்று, பயந்து பயந்து இதை அணுகினால் அது எட்ட எட்டப்போய்விடும் எனக் கூறுகின்றார்.

(ஆ) மீன்குஞ்சு நீந்துவது மிகவும் மென்மையாக இருக்கும். அதனைப் போன்று தனது ஒன்பது வயது மகன் கணிப்பொறியை மிகவும் இலகுவாகக் கையாளப் பழகிக் கொண்டான் என்பதனை இத்தொடர் விளக்கிநிற்கின்றது.

(v) (அ) தஞ்சாவூர்ப் பெரிய கோவில், கங்கை கொண்ட சோழபுரம், இசைக்கலை, பரதநாட்டியம் போன்றவை இந்தியாவில் பக்தியை வெளிக்காட்டும் கலை நிரம்பிய இடங்களாகும்.

(ஆ) இந்தோனேசியாவிலிருக்கும் பிறம்பாணான் பானாத்தரான் கோயில்கள், கம்புச்சியாவிலிருக்கும் சில அரண்மனைகள், சிற்பங்கள், தாய்லாந்தில் கொண்டாடப்படும் திருவெம்பாவைத் திருநாள் போன்றவை பக்திசார் கலைகள் பிற நாடுகளில் பரவியமைக்கான சான்றுகளாகும்.

**(4 x 5 = 20 புள்ளிகள்)**

**3. பாரதியார் சுயசரிதை**

**(அ)** பாரதியார் சுயசரிதையிலே பாரதியாரின் பிள்ளைக் காதல் அழகுற வெளிக்காட்டப்பட்டுள்ளது. அதனை பின்வருமாறு எடுத்து நோக்கலாம். முத்துப் போன்ற புன்னகை பிரகாசிக்க, நீரெடுப்பதற்காக செல்லும் அவளைக் கண்டவர் காதல் கொள்ளும் படியாக மன்மதன் அவள் முன் காதல் போர் தொடுத்து செல்கின்றான். அதில் தானும் அகப்பட்டதாக பாரதியாரின் காதல் உணர்வு வெளிப்படுகிறது, அவள் நீரெடுப்பதற்காக செல்லும் வழியில் அவளின் வருகைக்காக தினமும் காத்திருத்தல். அவள் செல்லும் வழி முழுதும் அவளது பின்னழகை தன் கண்கள் ஆராய்ந்து அதன் வாயிலாக மகிழ்ச்சி கொள்கின்றது எனக் கூறுதல், அவளது சிந்தனையில் தன் மனமானது சுழன்று அதன் மூலம் மகிழ்ச்சி அடைந்ததாக பாரதியார் கூறுகிறார். அதாவது தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு சுழன்று செல்லும் சிறிய விலங்கினைப் போல தன் மனமும் அவளின் சிந்தனையில் சுழல்கின்றமை. மேலும், அவளது பிரகாசம் பொருந்திய அழகிய முகமானது தன்னை திரும்பி பார்த்தால் தன் ஐம்புலன்களும் அழிந்து மீண்டும் ஓர்

புதுப்பிறவியை அடைவேன் என கூறுகிறார். இவ்வாறு பாரதியாரின் காதல் உணர்வு மற்றும் மாசில்லாத பிள்ளைக்காதல் என்பவற்றை காணலாம்.

**(08 புள்ளிகள்)**

**(ஆ)**

- தேசபக்தர்களை அழிப்பதற்கு படைவீரர்கள் காத்திருப்பதைப் போல அவளின் வருகைக்காக நானும் காத்திருந்தேன். உவமானம் - தேச பக்தர் வருகைக்காக காத்திருக்கும் படை வீரர், உவமேயம் - அவளின் வருகைக்காக காத்திருந்த பாரதி. பொதுத்தன்மை - காத்திருத்தல்
- தேர்ச்சக்கரத்தில் சிக்கிய சிறிய விலங்கு தேர் செல்லும் திசை எங்கும் இழுபட்டுச் செல்வதனைப் போல என் மனமும் அவள் செல்லும் வழி முழுவதும் செல்லுதல். உவமானம் - தேர்ச் சக்கரத்தில் இழுபட்டுச் செல்லும் விலங்கு, உவமேயம் - அவள் நினைவில் செல்லும் பாரதியார் மனம், பொதுத்தன்மை - ஒன்றிணைந்த தன்மை, சுழன்று செல்லல்.
- ஆடுபோல் அங்கும் இங்கும் தாவிப் பல பொருள் நாடுதல்.
உவமானம் - ஆடு போல் தாவுதல், உவமேயம் - பல பொருள் நாடுவோர், பொதுத்தன்மை - அலைதல், தேடுதல்
- நற்கதிகள் கிடைக்கும் என கருதாதவர்கள் கண்ணில்லாதவர் போல பிரமிப்பர்.
உவமானம் - கண் இல்லாதவர், உவமேயம் - நற்கதி கிடைக்காது எனக் கருதுவோர், பொதுத்தன்மை - கிடைக்கப்பெறாமை
- முத்துப் போன்ற புன்னகை கொண்ட பெண்.
உவமானம் - முத்து, உவமேயம் - பெண்ணின் புன்னகை, பொதுத்தன்மை - அழகு (வெண்மை)
- சுதந்திர நற்பயிர் என்பதன் மூலம் உருவக அணி வெளிப்படுத்தப்பட்டுள்ளது இவ்வாறு அணிகளின் வெளிப்பாட்டினை பாரதியார் சுயசரிதையில் காணலாம்.

**(07 புள்ளிகள்)**

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

**கிருட்டிணன் தூதுச்சருக்கம்**

**(அ)**

கிருட்டிணன் தூதுச்சருக்கத்தில் கிருஷ்ணனது பெருமைகள் வெளிப்படுவதை இப் பகுதியில் காணலாம். மகாபாரதத்தின் பிரதான பாத்திரங்களில் ஒன்றாக விளங்குவது கிருஷ்ணன் எனும் பாத்திரமாகும். அத்தகைய கிருஷ்ணனது பெருமைகளை பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

- இந்திரன் உட்பட்ட (முப்பத்து முக்கோடி) தேவர்களின் தலைவனாக தேவாதி தேவனாக விளங்குபவன். "அருள் புரிந்தான் அமரர் கோமான்…"
- எமக்கெல்லாம் தலைவனாக விளங்குபவன். - " கடன் என்றான் எம்பிரானே…"
- மிகுந்த மாயை உடையவன். மாயங்கள் புரிவதிலே அசுரர்களை விடவும் வல்லமை கொண்டவன். ஆகையால் மாயவன், மாயோன் எனவும் பெயர்களைப் பெறுகின்றவன். - "மாமாயன் கூறல் உற்றான்…"
- குவலயபீடம் எனும் யானையின் கொம்பினை ஒடித்தவன். - " சிந்துரத்தின் மருப்பு ஒசித்த செங்கண் மாலே…"
- சிவந்த கண்களையுடையவன் என கூறப்படுபவன். - " செங்கண் மாலே…"
- உலகம் முழுவதையும் தனது நாபிக்கமலத்தில் (கொப்பிழிலிருந்து) இருந்து உண்டாக்கியவன். "ஞாலம் எல்லாம் தீத்தோனே…"
- செந்தாமரையில் வீற்றிருக்கின்ற திருமகளாகிய மகாலட்சுமி விருப்பமுடன் அமர்ந்திருக்கின்ற. உறைந்திருக்கின்ற மார்பினை உடையவன் கௌத்துபம் எனும் மணியை அணிந்த மார்பினை உடையவன். "பூந்தவிசில் பூவை புணர் மணி மார்பா…"
- அடியவர்களின் துன்பங்களை எல்லாம் நீக்கி அருள்கின்றவன். - "புன்மை யாவும் தீர்த்தோனே…"
- சிவ பிரானது இரத்தல் தொழிலை (பிச்சைத் தொழில்) இல்லாமல் செய்தவன்/இல்லாது ஒழித்தவன். " கடவுள் கங்கை நீர் முடித்தான் இரவு ஒழித்த நீ அறிய…"
- தனது திருமுடியில் வாசனை மிகுந்த துளசி மாலையை சூடியிருப்பவன்/அணிந்திருப்பவன். " சூடுகின்ற துழாய் முடியோன்…"

**(08 புள்ளிகள்)**

**(ஆ)**

- பாண்டவர்களில் இரண்டாமவனும் பெரும் பலம் பொருந்தியவனும் வாயுவின் மைந்தனுமாகிய வீமனது வீரம் அல்லது வெஞ்சினம் வெளிப்படும் தன்மை பற்றி வில்லிபுத்தூராழ்வார் இங்கு அழகுற எடுத்துக் காட்டியுள்ளார். அதனை பின்வருமாறு எடுத்து நோக்கலாம். போர் புரியாது சமாதானமான முறையில் தமக்குரிய ஆட்சி உரிமையை பெறுவதற்கு தருமன் விருப்பங்கொண்டு கிருஷ்ணனை சமாதானத்தூது அனுப்பும் வகையிலான சமாதானமான வார்த்தைகளைக் கேட்ட அத்தருமனது இரண்டாவது தம்பியும் மிகுந்த வலிமை உடையவனுமாகிய வீமன் அண்ணனின் சமாதான வார்த்தைகளை வெறுத்து போரினை வலியுறுத்தி கோபமான வார்த்தைகளைக் கூறுகின்றான். தருமனின் சமாதானப் பேச்சினைக் கேட்டு தன் உள்ளத்தில் அடக்க முடியாத கோபமானது அதிகரிக்க, குற்றமில்லாத சொற்கள் குளறும் படியாக சினம் கொண்டான். என்பதனை
**"மூத்தோன் இவ்வாறு உரைப்ப இளையோன்**
**வெஞ்சினம் மனத்திலே மூளமூள**
**நாத்தோம் இல் உரை பதற....'** எனும் பாடலடிகள் மூலமாக விளங்கிக் கொள்ளலாம்.

- அதாவது தமக்கு ஏற்பட்ட அவமானங்களை மறந்து சமாதானத்தை விரும்புகின்ற தருமனை மானமில்லாதவன் இவ்வாறு உரைப்பதற்கு என்ன செய்வது என வீமன் கண்ணனிடம் கூறுகின்றான். இதுவும் வீமனின் கோபத்தின் வெளிப்பாடேயாகும். மேலும் வீமன் கோபம் கொண்டு தருமனை நோக்கி பின்வரும் கோப வார்த்தைகளை உரைக்கின்றான்.

- திரௌபதி சபையில் துகிலுரியப்படும் வேளையில் வெட்கமடைந்து அழுது எம்மிடம் முறையிட்ட போது தனித்தனியாக எம் நால்வரையும் (வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்) கோபிக்க வேண்டாம் என தடுத்தாய். அச் செயலால் எமக்கும் எம் குலத்துக்கும் தீராத பெரும் பழியை ஏற்படுத்தி விட்டாய்.

- கொடிய காட்டிலே பன்னிரண்டு ஆண்டுகள் கழித்த பின்னரும் ஓராண்டு மறைந்து வாழ்ந்த காலப்பகுதி (அஞ்ஞாதவாசம்) என்பன நீங்கிய பிறகும் பகைவர்களான துரியோதனாதியர்களை கொல்வதற்கு பின் நிற்கின்றாய். என வீமன் தருமனை நோக்கி கோபத்துடன் இவ்வார்த்தைகளை உரைக்கின்றான். மேலும் தம்மைக் காட்டிற்கு அனுப்பிய துரியோதனனை போரிலே கொன்று அவன் நம்மிடம் இருந்து பெற்றுக்கொண்ட நாடு மற்றும் செல்வங்கள் அனைத்தையும் பெற்றுத்தருவதுடன் துரியோதனன் வெறுப்படையா வண்ணம் அவனுக்கு இந்திரனின் தலைநகராகிய அமராவதி நகரை வழங்குவேன் என தன் வீரத்தினை வெஞ்சினமாக வீமன் வெளிப்படுத்துகின்றான்.

- இது மட்டுமன்றி தருமனை நோக்கி அவன் செய்து முடிக்கவேண்டிய விடயங்களை நினைவுபடுத்தும் வகையில் அவை அனைத்தையும் செய்து முடித்து விட்டான் என மறைமுகமாக அதாவது வஞ்சகப் புகழ்ச்சியாக தன் கோபத்தினை வெளிப்படுத்துகிறான். அவற்றை நோக்கும் போது,போரினை முடித்துவிட்டான், திரௌபதியின் அவிழ்ந்த கூந்தலை முடிந்து விட்டான், அன்று அஸ்தினாபுர சபையில் தம்பியர் செய்த சபதங்களை நிறைவேறச் செய்துவிட்டான், நிலைத்து நிற்கின்ற பழியற்ற பெரும் புகழைப் பெற்றுவிட்டான். இவற்றை எல்லாம் நிறைவேற்ற வேண்டுமாயின் போரானது நிகழவேண்டியது அவசியம் என்பதையும் வீமனது கோபம் உணர்த்துகின்றது. இதனை
**" போர் முடித்தான் அமர் பொருது புலம்புறு சொல்....'** எனும் பாடல் விளக்குகின்றது.

- மேலும், வீரம் கொண்டு இருபக்கத்து படைகளும் அணிவகுத்து வரும் போரில் துரியோதனனுக்கு துணையாக வருகின்ற அரசர்களைக் கொன்று எமது பகையை அழித்து எமக்குரிய ஆட்சி உரிமையுடைய நாட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும். எனவும் தருமனிடம் கோபம் கொண்டு வீமன் உரைக்கின்றான்.
**" அணிந்து வரும் சமரில் எதிர்த்து அரவு உயர்த்தோனுடன்....''**

**(07 புள்ளிகள்)**

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

**4. மூத்தம்மா**

**(அ)**

- தயிர்ச் சட்டியின் வடிவத்தில் வானில் கிடந்தது நிலா. அதாவது தயிர்ச் சட்டியைப் போல வட்ட வடிவில் வானில் நிலவானது காணப்பட்டது என உவமையணியின் வாயிலாக விளக்கியிருத்தல்
- கொட்டி வைத்த இடத்தில் உறைந்திருக்கும் எருமைத் தயிரைப் போல சற்று நேரமும் ஆடாமல் அசையாமல் அந்த நிலாவின் தோற்றம் இருந்ததாகக் கூறுதல்
- வெண்ணிற மேகங்கள் நிலவை மூடி மூடி ஆலிங்கனம் செய்கையில் உறைதயிரின் பாலாடையோ என வியக்க வைத்தது அதன் அழகு.
- தூரத்தே சீறும் கடலின் சீற்றம் துல்லியமாய்க் கேட்டல், சற்றுத்தள்ளி நிற்கும் மாமரத்தின் பூக்கள் காற்றுக்கு உதிர்ந்து கூரைக்கு மேல் நச்சென விழுதல்
- இலைகளுக்கிடையே நிலாவொளி கசிந்து காணப்படல்

- மஞ்சோனாமரம் கிளைகள் பரப்பிக் காற்றுக்கு தலைவிரித்தாடி ஒய்யாரமாக மிகவும் பெரியதாக வளர்ந்திருத்தல்
- கோழிகளின் சலசலப்பு, மாடுகள் மூச்சுவிடல், வால் சுழற்றுதல், நுளம்பு விரட்டுதல் பற்றிய வர்ணனைகள்

(08 **புள்ளிகள்)**

**(ஆ)**

மூத்தம்மா சிறுகதையின் பிரதான பாத்திரங்களில் ஒன்றாகவும், கதை சொல்லியாகவும் விளங்குபவன் காசிம் ஆவான். இவன் பல்வேறு குணப்பண்புகளைக் கொண்டவனாகக் காணப்படுகின்றான். அவற்றைப் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

- மூத்தம்மா, மூத்தவாப்பா, தங்கை ஆகியோரிடத்தில் அதிக பாசம் கொண்டவன்
- கிராமத்து பழைய நம்பிக்கைகளை அப்படியே நம்பி வாழ முற்படுபவன். அந்தவகையிலே தனது தாயார் இறந்த போது பக்குல் கத்தவில்லை என்றும் அப்படிக் கத்தியிருந்தால் உம்மாவை வீட்டுக்குள் சாகவிடாமல் காப்பாற்றி இருக்கலாமென்றும் நம்பியமை
- இறந்து போன தன்னுடைய தாயாரின் நினைவுகளால் துயருறுபவன்
- மூத்தம்மாவின் செயல்களை ஆச்சரியத்தோடும் அக்கறையோடும் கவனித்துப் பெருமை கொள்பவன். அந்தவகையிலே அவளது தோற்றத்தையும் நடத்தையையும் ஆளுமையையும் பார்த்து அவளை ஒரு அரசியாக கற்பனை செய்தவன்.
- அச்சமுடையவனான காசிம் மூத்தமாவினைப் பார்த்து அவவைப் போலவே தானும் துணிவுடன் இருக்கப்பழகியவன்.
- பிறரிடம் கதை கேட்பதில் ஆர்வம் உடையவன்
- மூத்தம்மாவின் இழப்பினைத் தாங்கிக் கொள்ள முடியாதவன்
- சிறுவயதிலே பொறுப்புணர்ச்சி உடைய ஒருவனாக விளங்குபவன்
- மூத்தவாப்பாவிற்கு உதவி ஒத்தாசைகள் புரிபவன்.

(07 **புள்ளிகள்)**

(08 + 07 = 15 **புள்ளிகள்)**

**நாவலர் எழுந்தார்**

**(அ)**

- வை.விஸ்வநாதன்பிள்ளை சென்னை சர்வகலாசாலையால் நடாத்தப்பட்ட பீ ஏ பரீட்சையில் சித்தியடைந்த யாழ்ப்பாணத்தவர்கள் இருவரில் ஒருவர்.
- இவர் ஒரு கணிதமேதை, மகாவிவேகி, சி.வை.தாமோதரம்பிள்ளைக்கு ஆசிரியர்.
- சிறுவயதிலிருந்தே பத்திரிகைகளில் கண்டனங்களை எழுதி வெளியிடுபவர்.
- சிதம்பரத்திலே நாவலருடன் நேருக்கு நேராக வாக்குவாதத்தில் ஈடுபட்டு, அதிலே தோல்வியுற்று அன்றுமுதல் நாவலரை தனது குருவாக ஏற்றுக் கொண்டவர்.
- ஆறுமுகநாவலரைவிட இரண்டு வயது மூத்தவர்
- வாதமகாசபைக்கு நாவலருக்குப் பதிலாக தலைமைப் பொறுப்பை ஏற்றவர்.

(08 **புள்ளிகள்)**

**(ஆ)**

- நாவலர் எழுந்த நிலையினை இராமாயணத்தில் இராமனது கதாபாத்திரத்திற்கு இணையானதாக பண்டிதமணி காட்டுகிறார். அதாவது விஸ்வாமித்திரர் சிவதனுசை வளைக்கும் படி ஒரு பார்வை மூலம் இராமனுக்கு ஆணை பிறப்பிக்கின்றார். விஸ்வாமித்திரருடைய பார்வையாகிய நெய்யாகுதியை அடுத்து அக்கினிச் சுவாலை வெளிப்படுவதனைப் போல இராமன் எழுந்தார் என கம்பர் அந்நிலையினை காட்டுகிறார். அது போல நாவலரும் தன் நிலையிலிருந்து தலையணைகள் அங்கும் இங்கும் சிதறும் வண்ணம் எழுந்தார் என கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

  ''பொழிந்த நெய்யாகுதி வாய்வழி பொங்கி எழுந்தன
  கொழுங் கனலென்ன எழுந்தார்...''

- மிதிலை நகரின் மிகப் பெரும் சபையில் யாரும் எதிர்பாராத சமயத்தில் கம்பீரமான ஓர் நடை நடந்து சென்றார் இராமன் வில்லை நோக்கி, அதைப் போலவே கூட்ட மண்டபத்தில் நாவலர் அவர்கள் நடந்து சென்றார். அதாவது இராமனின் நடையைக் கண்டு பெருமை மிக்க ஆண்சிங்கமும், பெரிய இடபமும், பொன்மலையாகிய மேருவும், யானையும் இவையனைத்தும் நாணமடைந்ததாம். அது போல பெருமை மிக்க பல அம்சங்கள் நாணம் அடையும் படியாக நாவலர் எழுந்து விவாத மேடை நோக்கி நடந்து சென்றார் எனக் கட்டுரையாசிரியர் அழகுற அந்நிலையினை கூறுகின்றார்.

(07 **புள்ளிகள்)**

(08 + 07 = 15 **புள்ளிகள்)**

**5. குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்**

**(அ)**

இக்கவிதை முழுவதுமாக ஆசிரியர் வன்னி மண்ணிலே காணப்படுகின்ற இயற்கைக் காட்சிகளை வர்ணித்துப் பாடியுள்ளார் அவற்றைப் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்

- மாமரங்களின் கிளைகளில் தாவி விளையாடும் குரங்கினங்கள் மாங்கனிகளைப் பறித்து உண்டு மகிழ்தல்
- பூமரத்தின் இலைகளில் வண்டுகள் மோதுண்டு புது மலர்களின் தேனைப் பருகி ரீங்காரம் செய்தல்
- பச்சைக் கிளிகள் தனது இணையுடன் மகிழ்ச்சியுடன் பருவகாலத்து இரை தேடிப் பறத்தல்
- பாமரங்களிலே இருந்து பாடலிசைத்துப் பசுமையான குயில்கள் கூவுதல்
- சாமரங்கள் வீசுவது போல மயில்கள் தோகை விரித்து நடனமாடுதல்
- தென்றலில் அசைந்தாடும் நெற்கதிர்கள்
- முற்றத்திலே மண் அளைந்து விளையாடும் குழந்தைகள் முழங்காலில் திரிந்து முத்துப் போன்ற புன்னகை சிந்துதல்
- தம் கன்றின் உடலை நக்கி கனைக்கின்ற பசுகக்ளின் கூட்டம்
- தம் துணைவியர்களான நட்சத்திரங்களுடன் சந்திரன் வானில் உலா வருதல்
- தம் கூட்டத்தை அழைத்து உணவுண்ணும் காக்கைகளின் இயல்பு
- சோலையிலே கனிக்கூட்டங்கள் அசைந்தாடிக் கொண்டு இருத்தல்
- குஞ்சுக்கு இரை தேடி வந்து அதை ஊட்டும் குருவி
- தேனருவியைப் போல வழிகின்ற உழவனின் வியர்வை.
- பனிக் கூட்டம் விலக்கி வானில் வீரம் கொண்டு உலாவரும் சூரியன்
- கருமுகில்கள் தவழ்ந்து வருகின்ற மழைக்காலம்
- கூரைகளில் கூடு கட்டுகின்ற அணில்களின் அழகு
- பஞ்சு போன்ற திரண்ட முகில்கள் வானத்தில் பரவுகின்ற நேரம் சூரிய ஒளி அதற்கு வர்ண முலாம் பூசுதல்
- நீரை எதிர்த்தோடும் மீன்கள், ஊர்ந்து செல்லும் எறும்புகள், அசைந்தாடும் பூமரங்கள், இலைகள், இரை தேடி வரும் அதிகாலைப்பறவை, மூடுகின்ற இமைக்குள் அடங்காத முழுநிலவு போன்ற பெண்ணின் கண்கள், முந்தானையைப் போர்த்திக் கொண்டு இருக்கும் செந்தாழம் பூக்கள்
- அருவியின் குளிர்ந்த நீர், வாழைக் குலை தள்ளி சாய்ந்திருக்கும் அழகு, குளித்து சிறகை உலர்த்தும் பறவையின் அழகு, சிவந்த ஆம்பல் மலர்களால் சூழப் பெற்ற சிறு பொய்கை

**(05 புள்ளிகள்)**

**ஆ**

இக்கவிதையில் ஆசிரியர் வன்னி மண்ணினுடைய உழவுத் தொழில் பற்றியும் அங்கே வாழுகின்ற உழவர்களுடைய மேன்மை பற்றியும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

- வயல்களிலே செந்நெற்கள் முதிர்ந்து விளைந்து தென்றலிலே அசைந்தாடுவதற்கு உழவர்களுடைய உழைப்பே காரணமாக இருத்தல்
- ''தேனருவி என வழியும் ஏருழவன் வியர்வை..'' என்ற பாடலடியினூடாக வியர்வை சிந்தி உழைக்கும் உழவனின் மேன்மை விளக்கப்பட்டுள்ளது
- ''குணக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்காம் மனிதன்.'' என்ற தொடரின் மூலம் உழவனின் குணம் மலையாக உருவகிக்கப்படுகின்றது. உழைத்து உண்ணும் மாண்பு கொண்டவன் என்பதுவும் புலப்படுகின்றது.

**(05 புள்ளிகள்)**
**(05 + 05 = 10 புள்ளிகள்)**

**6. தமிழ்ப்பண்பாடு**

(அ)

இக் கட்டுரையிலே தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சி பற்றி ஆசிரியர் குறிப்பிடுவனவற்றை பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

- பிற சமயத்தவர்கள் தமிழரது பண்பாட்டினை தழுவியமையால் தமிழ்ப் பண்பாடு வளர்ச்சி அடைந்தது.
- இந்து சமய வழிபாட்டு முறையும் இலக்கியங்களும் தென்னாட்டுத் தத்துவங்களால் வளம் பெற்றன இதுவும் தமிழர் பண்பாட்டின் வளர்ச்சியை எடுத்துரைக்கின்றது.
- பார்ப்பனரும், சமணரும், பௌத்தரும், கிறிஸ்தவரும் தமிழ்ப் பண்பாட்டினைத் தழுவியமை
- பக்தியின் மொழி தமிழ் எனப்பட்டதுடன் அத் தமிழ் மொழியில் பல இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளமையும் தமிழர் பண்பாட்டின் எடுத்துக்காட்டாகும்.

- சிலப்பதிகாரம், மணிமேகலை, தேம்பாவணி, சீறாப்புராணம் என்பனவற்றில் சமயக் கோட்பாடுகளில் தமிழர் பண்பாடு பற்றிய குறிப்புக்கள் விளக்கப்பட்டுள்ளமையைக் காண முடிகின்றது.
- இந்தியப் பண்பாட்டில் அதிகம் இடம் பெற்றுள்ளது தமிழர் பண்பாடேயாகும். இவ்வாறு தமிழர் பண்பாட்டின் வளர்ச்சி பற்றி அறிய முடிகின்றது.

**(05 புள்ளிகள்)**

(ஆ)

தமிழ் பக்தியின் மொழி என்பதை எடுத்துரைக்க கட்டுரையாசிரியர் பல காரணங்களைக் குறிப்பிடுகின்றார். அவற்றைப் பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

- பக்தி இலக்கியங்கள் பலவும் தமிழ் மொழியிலேயே தோற்றம் பெற்றுள்ளதால் அத்தகு பக்தி இலக்கியங்களைப் போல அழகிலும், ஆழத்திலும், பரப்பிலும் வேறெங்கிலும் இல்லை எனக் கூறுதல்.
- பரிபாடல் முதலாக விபுலானந்தர் இலக்கியம் வரை புலவர்கள் பலரும் பாடிய பாடல்கள் தமிழ் மொழியிலே பிறர் இன்புறும் வகையில் அமையப் பெற்றுள்ளமை.
- பக்தியை உணர்த்தும் சொற்கள் பலவும் தமிழ் மொழியில் அமைந்துள்ளமை
- நாயன்மார்கள், ஆழ்வார்கள், மற்றும் கம்பர் போன்றோரின் தமிழ்ப் பக்தியுணர்வு உலகிலே நிகரற்றது.
- ஏனைய தமிழ்க்கலை பலவற்றிலும் பக்திப்பண்பு இணைந்திருப்பதைக் காணலாம். உதாரணமாக, தஞ்சைப் பெருங்கோயில், இசைக்கலை மற்றும் கங்கை கொண்ட சோழ புரம் என்பவற்றை குறிப்பிடலாம்.

**(05 புள்ளிகள்)**
**(05 + 05 = 10 புள்ளிகள்)**

**7. நீதிப்பாடல்கள்**

(அ)

- வெற்றிவேற்கை அதிவீரராமபாண்டியரினால் பாடப்பட்டதாகும். புறத்தோற்றத்தைக் கொண்டு யாரையும் மதிப்பிடக்கூடாது அவரின் பயன்பாட்டினைக் கொண்டே மதிப்பிட வேண்டும் என இப்பாடல் விளக்குகின்றது. அந்தவகையிலே பெரியோர் எல்லாம் பெரியவருமல்லர். சிறியவரெல்லாம் சிறியவருமல்லர் என்பதனை பனை மரத்தின் விதை ஆலமரத்தின் விதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் விளக்கி இருக்கின்றார். அதாவது இனிமை நிறைந்த பனைமரத்தின் திரட்சியான விதை வானை நோக்கி பெரிதாக வளர்ந்தாலும் ஒருவர் இருக்க நிழலைத் தராது. ஆனால் மீனின் முட்டையைவிடவும் சிறிதாகக் காணப்படும் ஆலமரத்தின் விதையிலிருந்து வரும் ஆலமரம் நால்வகைப் படைகளோடு மன்னனும் இருப்பதற்கு நிழலைத் தரக்கூடியது. இதன் மூலமாக பெரியவர் சிறியவர் இயல்புகள் விளக்கப்படுகின்றன.

**(05 புள்ளிகள்)**

(ஆ)

- அடக்கமுடையவரின் இயல்புகள், செயற்பாடுகள் பற்றி வாக்குண்டாம் பின்வருமாறு எடுத்தியம்புகின்றது. அதாவது இப்பாடலில் வெளிப்படும் நீதிக் கருத்தினை நோக்கும் போது அடக்கமுடையவர்கள் தமக்கான தகுந்த காலம் வரும் வரைக்கும் காத்திருப்பர். அதாவது கொக்கு பெரிய மீனின் வருகைக்காக காத்திருபப்தைப் போல அடக்கமுடையாரும் காத்திருப்பார்கள். ஆகவே அவ்வாறு இருப்போரை அறிவில்லாதவர் எனக் கருதி அவர்களை வெல்வதற்கு கருதக்கூடாது எனும் கருத்து புலப்படுத்தப்படுகின்றது. அதாவது, கொக்கு - சிறிய மீன்களை போக விட்டு பெரிய மீனின் வருகைக்காக காத்திருக்கும். அது போல அடக்கமுடையவர் - தமக்குக்குரிய சந்தர்ப்பம் வரும் வரைக்கும் காத்திருப்பர். இதனை,

"அடக்கம் உடையார் அறிவிலார் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டாம் - மடைத்தலையில்.." எனும் பாடல் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

**(05 புள்ளிகள்)**
**(05 + 05 = 10 புள்ளிகள்)**

***